# Inspirational Interview



பொற்கிழிக் கவிஞர்
ஐயா சொ.சொ. மீனாட்சிசுந்தரம்

*எல்லோராலும் சொ.சொ. மீ. ஐயா என்று அன்புடன் அழைக்கப்படும் பொற்கிழிக் கவிஞர் ஐயா சொ.சொ. மீனாட்சிசுந்தரம் அவர்கள் கந்தபுராணம், திருவாசகம் முதலிய பல ஆன்மீக இலக்கியங்களுக்கு எளியவர்களுக்கும் புரியும்படியான விளக்கவுரை அளிக்கும் மிகச்சிறந்த மேடைப் பேச்சாளர். ஐயாவுக்கு தமிழிலும், ஆன்மீகத்திலும் பற்று அதிகம். இப்படிப்பட்ட பெருமைக்குரிய ஐயா அவர்கள் நமது Inspirational Interview பகுதிக்காக தமிழைப்பற்றியும், ஆன்மீகத்தைப்பற்றியும் தமக்கு கடலளவு தெரிந்த விஷயங்களிலிருந்து சில துளிகளை நமது நாணல் வாசகர்களுடன் பகிர்ந்து கொள்கிறார்கள்.*



**உமா சொர்ணம், மிச்சிகன்**

என் பெயர் உமா சொர்ணம். சொந்த ஊர் தேவகோட்டை. இப்போது குடும்பத்துடன் மிச்சிகனில் இருக்கிறேன். எனக்கு தமிழிலும், நம் பழக்கவழக்கங்களையும், அவற்றின் அர்த்தங்களையும் தெரிந்து கொள்வதிலும் மிகுந்த ஆர்வம் உண்டு.



**சஞ்சீவ் சொர்ணம், மிச்சிகன்**

சஞ்சீவ் சொர்ணம் தமிழ் கற்றுக்கொள்வதிலும், நமது பாரம்பரியத்தைப் புரிந்து கொள்வதிலும் மிகுந்த ஆர்வமுள்ள 11ஆம் வகுப்பு மாணவன். சஞ்சீவுக்கு வருங்காலத்தில் சிறந்த Baseball Player ஆகவேண்டும் என்பதே லட்சியம்.

**உமா:** தங்களுக்கு தமிழ் இலக்கியப்பற்று எப்பொழுது, எப்படி ஏற்பட்டது? இவற்றில் ஈடுபாட்டை விதைத்தது யார்?

**ஐயா:** நகரத்தார் பெருமக்களுக்கு தெய்வப்பற்றும், மொழிப்பற்றும் ரத்தத்தில் ஊறிப்போனவை. தாய்மார்கள் அந்தக் காலத்தில் அற்புதமாக தாலாட்டு பாடுவார்கள்; தன்னையறியாமல் யாப்பிலக்கணம் ஒழுங்காக வரும். அதனால் எனக்கு இயல்பாகவே தமிழில் ஈடுபாடு இருந்தது. ஆனால் நான் வணிகம் படிக்கவேண்டிய கட்டாயம் உருவானது. தமிழ் படிக்கவேண்டும் என்ற ஆசை உள்ளே இருந்துகொண்டே இருந்தது. இதற்கு இரண்டு பேர் முக்கியக் காரணங்கள்.

முதலாமவர், எங்கள் தேவகோட்டை நகரத்தார் மேல்நிலை பள்ளியின் தலைமையாசிரியரான திரு. ரங்கஸ்வாமி ஐயங்கார். அவர் ஆங்கிலத்தில் பெரிய மேதை, தமிழிலும் மிகுந்த ஈடுபாடு கொண்டவர். நான் SSLC படிக்கும்போது அவர் என்னை காரைக்குடி கம்பன் விழாவிற்கு அழைத்துச் சென்றார். அங்கு வந்திருந்த பல சான்றோர்களின் பேச்சை கேட்டபோதுதான் என் மனதில் முதல் விதை போடப்பட்டது.
இரண்டாமவர், காரைக்குடி அழகப்பா கல்லூரியில் என்னுடைய பேராசிரியரான Dr. வ. சுப. மாணிக்கனார் அவர்கள். கிட்டத்தட்ட மூன்றரை ஆண்டுகளில் கல்லை



சிற்பமாக மாற்றுவதுபோல் அவர் என்னை உருவாக்கினார்.

**உமா:** உலகப்புகழ் பெற்ற மதுரை மீனாட்சி அம்மன் திருக்கோவிலின் வரலாற்று சிறப்புமிக்க அரிய தகவல்கள் சிலவற்றைப்பற்றி எங்களுக்கும் சொல்ல முடியுமா?

**ஐயா:** ரெண்டு, மூணு செய்திகள் சொல்றேன். சித்தர்களில் முதல் சித்தர் சிவபெருமான். திருவிளையாடல் புராணத்தில் சித்தராக வந்தவர், எல்லாம் வல்ல சித்தர் என்று அவருக்கு பெயர். கல் யானையை கரும்பு உண்ணச் செய்தவர் சொக்கலிங்கப்பெருமான்.

மதுரை மீனாட்சி கோவிலுக்குள் பதினாறு சித்தர்களின் சமாதி அடங்கியிருக்கிறது என்று ஒரு பெரியவர் கிட்டத்தட்ட நாற்பது வருடத்துக்கு முன்னால் எனக்கு சொன்னார்.

மதுரை மீனாட்சி கோவிலில், சொக்கலிங்கப்பெருமான் சந்நிதியில் ஊர்த்துவதாண்டவமூர்த்திக்குக் கீழே பேய் வடிவத்திலே கையைத் தூக்கிக் கொண்டு நின்ற கோலத்தில் காரைக்கால் அம்மையார் காட்சி அளிக்கிறார். வேற எங்கும் அதை பார்க்க முடியாது. கல்லிலே பேய் வடிவம் - எலும்புக்கூடு போல் திருமேனி, ஆனால் முகத்திலே அப்படி ஒரு பக்தி.

மற்ற கோவில்களுக்கு போனால் இது வேண்டும், அது வேண்டும் என்று கேட்க வேண்டும். மதுரை மீனாட்சியிடம் போனால் கேட்கவே வேண்டாம், எது கொடுக்கப்பட வேண்டுமோ அதை அம்பாள் அருமையாக கொடுப்பாள். பால் நினைந்தூட்டும் தாயினும் சாலப்பறிந்து அருள் செய்பவள் மதுரை மீனாட்சி.

இன்னொரு சிறப்பு சொல்கிறேன். பதினைந்து வருடத்துக்குள் நடந்தது. மதுரையில கருமுத்து கண்ணன் அவர்கள் மீனாட்சி கோவில் Trust Boardல் Chairman.

கும்பாபிஷேகத்துக்கு Trust Boardல் இருந்தவர்கள் ஒரு தேதி குறிப்பிட்டார்கள். கோவில் அர்ச்சகர்கள் இன்னொரு தேதி குறிப்பிட்டார்கள். எந்த தேதியில் நடத்துவது என்று தெரியவில்லை. அர்ச்சகர்கள் மீனாட்சிக்கு முன்னால் சீட்டு எழுதி போட்டபோது கூட்டத்திலிருந்து ஒரு பெண் குழந்தை அதுவாக வந்து ஒரு சீட்டு எடுத்து கொடுத்தது. அதிலே அறங்காவலர்கள் கொடுத்த தேதி எழுதியிருந்தது. அவருக்கு மிக்க மகிழ்ச்சி. உன் பெயரென்ன என்று கேட்டபோது மீனாட்சி என்று சொல்லிவிட்டு அந்தக்குழந்தை ஓடிப்போய்விட்டது.

மீனாட்சியின் கருணைக்கு எல்லையே கிடையாது.

**சஞ்சீவ்:** கோவில் கோபுரங்களில் கலசங்கள் வைப்பதற்கு என்ன ஆன்மீக/அறிவியல் காரணம்?

**ஐயா:** ஆன்மீகத்தில் கோவில் கலசம் என்பது ஆண்டவனுடைய திருமுடி மாதிரி. தூரத்திலிருந்து கோவில் கலசத்தைப் பார்த்தாலே மனதுக்கு சந்தோஷம். பெரிய கோபுரத்தைப் பார்த்தால் மனதுக்கு ஒரு விரிவு கிடைக்கும். அதற்காகத்தான் நம் சாமிகளை மலை மேல் கொண்டு போய் வைத்தது. மலையில் ஏறிப் பார்த்தால் எல்லாம் ஒரே மாதிரித் தெரியும். நூறடி உயரம் உள்ள வீடும், ஐயாயிரம் அடி உள்ள வீடும் அதே மாதிரி தான் தெரியும். கோபுரத்தைப் பார்த்தால் மனதுக்கு நிம்மதி - இது ஆன்மீகம்.

கோபுரத்தில் எத்தனை நிலை உள்ளதோ, அத்தனை கலசம் வைப்பார்கள். ஒவ்வொரு கலசமும் கிட்டத்தட்ட ஐந்தடி உயரம் இருக்கும். மேற்பகுதி கூர்மையாக இருப்பதால் மின்னலையும் இடியையும் இழுக்கக்கூடியது இந்த கலசம். அந்தக்காலத்தில், நம் வீடுகளைவிட கோவில் கோபுரம்தான் உயரமாக இருக்கும். வீடுகள் உயரமாக இருந்தால் இடி விழும்போது பாதிப்பு உண்டாகும். மேலும், கலசத்துக்குள் வரகு என்னும் ஒரு புஞ்சை தானியத்தை வைப்பதாலும் கோபுர கலசம் இடிதாங்கியாக செயலாற்றுகிறது. அதனால் கோபுரத்துக்கு கீழே வீடுகள் கட்டப்பட்டால் அந்த வீட்டுக்கு பாதுகாப்பு உண்டு.

இன்னொன்று சொல்கிறேன் - பஞ்சம் அல்லது வெள்ளம் வந்து எல்லா தானியமும் கெட்டுப்போய் விட்டால், புதிதாக தானியம் உண்டாக்க கோபுரக்கலசத்தில் உள்ள வரகைக் கொண்டுவந்து விதைப்பார்கள். இதெல்லாம் அறிவியல் ரீதியான காரணங்கள்.

**சஞ்சீவ்:** இப்போது இருக்கும் நவீன வசதிகள் இல்லாத அந்தக்காலத்தில், எப்படி இவ்வளவு கனமான கற்களைக்கொண்டு, உயரமான கோவில்களை கட்டியிருக்கிறார்கள்?

**ஐயா:** அந்தக்காலத்தில் போர் வராதபொழுது ராஜாக்கள் படைகளையும், யானைகளையும் பயன்படுத்தி பெரிய மண்மேடுகளை உருவாக்கி, மேலே உயர்த்திக் கட்டியிருக்கிறார்கள். இராஜராஜசோழன் பெரிய கோபுரத்தைக் கட்டியபொழுது ஒரு பெரிய பள்ளத்திலிருந்து மண்மேடு போட்டு அங்கிருந்து எடுத்துக்கொண்டு போனான் என்கிறார்கள். இவையெல்லாம் செவிவழிச் செய்திகள் தான்.

**உமா:** பலமுறை சபரிமலை மற்றும் பழனி பாதயாத்திரை சென்று வந்திருக்கிறீர்கள், அந்த ஆன்மீக அனுபவங்களில் சிலவற்றை எங்களுடன் பகிர்ந்து கொள்ள வேண்டும்.

**ஐயா:** ஒருமுறை மதுரையில் நடந்த சபரிமலை பக்தர்கள் நடத்தும் மண்டல பூஜைக்கு சென்றேன். நல்ல வழிபாடு, அருமையான பாட்டுக்கள். ஆஹா, அந்த அய்யப்பனை பார்த்தால், அப்படியே தோளில் கட்டி தூக்கிக்கொண்டு வந்து விடலாமா, என்று அவ்வளவு அற்புதமாக இருந்தது. கண்கண்ட தெய்வம். மனது ஈடுபட்டுவிட்டது. நானும் மாலை போட்டு அவர்களுடன் சபரிமலைக்கு புறப்பட்டேன்.

எருமேலிக்குப் போய் அங்கு வழிபாடு செய்து சபரிமலை சன்னிதானம் சிறிய பாதை (4.5 km) நடந்து மேலே போய்விட்டோம். அன்று ஜோதி தெரியக்கூடிய நாள். எங்களை 18 படிக்கு கீழ் உட்கார்த்திவைத்தார்கள். அப்போதெல்லாம் இவ்வளவு கூட்டமில்லை. பெருமானுக்குரிய ஆபரணங்களெல்லாம் பந்தளம் கோவிலிலிருந்து புறப்பட்டு சாயந்திரம் சுமார் 5 மணிக்கு வந்தது. ஆபரணப்பெட்டி வரும்பொழுது அதற்கு மேலே கருடன் பறந்துகொண்டே வருகிறான். சுமார் 6:30 மணிக்கு எதிரில் காந்தமலையில் ஜோதியை பார்த்து மகிழ்ந்தோம். இரவு 8 மணிக்கு 18 படிகளில் ஏறி மேலே போய் பார்த்தால் அய்யப்பசாமி அலங்காரத்துடன் கம்பீரமாக இருக்கிறார். அன்றைக்கு அவரிடத்திலே மனதை பறிகொடுத்தேன். ரொம்ப மகிழ்ச்சி. 1969லிருந்து 2019 வரை 51 ஆண்டுகள் அவரை பார்க்கக்கூடிய வாய்ப்புக் கிடைத்தது. என் வாழ்க்கையில் பல நிகழ்ச்சிகள் அவர் மூலம் நடந்தன. இதே மாதிரி பழனிக்கு பாதயாத்திரை, 19 ஆண்டுகள். தேவகோட்டையிலிருந்து பழனி வரைக்கும் (180km) நடக்கவேண்டும். ஒரு வருடம் காவடியும் எடுத்தேன். எவ்வளவோ நிகழ்ச்சிகள், ஒன்றை மட்டும் உங்களுக்காகச் சொல்கிறேன்.

நான் காவடி எடுத்த பொழுது ஒரு தேவகோட்டை அன்பர் - லெ. மு. மு. முத்துமாணிக்கம் செட்டியார் என்று பெயர் - பழனிக்கு பாதயாத்திரை பல ஆண்டுகள் போனவர், அவர் என்னிடம் “நீங்கள் காவடி எடுக்கிறீர்கள், முருகன் உங்களுடன் கூடவே வருவார். மறக்காதீர்கள். ஒவ்வொரு நாளும் இரவு ஒரு அபிஷேகம் நடக்கும், அதை பார்த்துவிடுங்கள்” என்று சொன்னார். அபிஷேகம் கிட்டத்தட்ட இரவு 12 மணி




ஆகிவிடும். காவடி தேவகோட்டையிலிருந்து புறப்பட்டு குன்றக்குடி வந்து, அங்கிருந்து, எல்லா செட்டிநாட்டு காவடிகளும் சேர்ந்து தூக்கிக்கொண்டு புறப்பட்டோம். அன்றிரவு 8 மணிக்கு மருதிபட்டி தோப்பு என்ற இடத்தில் காவடிகளை இறக்கி வைத்துவிட்டு எதிரில் ஒரு பொட்டைக்காட்டில் படுத்திருந்தோம். வானமே கூரை, மழை பெய்தால் அவ்வளவுதான். கால் கெஞ்சியது. ஒரு அன்பர் இட்லி கொடுத்தார், சாப்பிட்டேன். நல்ல தூக்கம் வந்தது. மனதில் நினைப்பு -அவர் சொல்லியிருக்கிறார், இன்றிரவு அபிஷேகத்தை பார்க்கவேண்டும், தூங்கக்கூடாது. உடல் அலுப்பு, முடியவில்லை, வேலுக்கு அபிஷேகத்தை நாளைக்கு பார்த்துக்கொள்ளலாம் என்று மனது சொல்லியது. சாய்ந்தவுடன் அருமையாக தூங்கிவிட்டேன். வேல் பூஜை, அபிஷேகத்திற்கு ஏற்பாடு, எல்லோரும் அங்கே நிற்கிறார்கள், நான் தூங்கிக்கொண்டிருந்தேன். யாரோ ஒரு புண்ணியவான், கனமான திருமேனி - ஓடி வந்தவர் நறுக்கென்று என் காலில் மிதித்தார். பாதயாத்திரை வந்ததால், எல்லா வலியையும் விட அதிக வலி காலில்தான் இருக்கும். என்னால் வலி தாங்க முடியவில்லை. சத்தம் போட்டு அவரை திட்டிக்கொண்டு எழுகிறேன் - எதிரில் பாலபிஷேகம். முருகா!! இதற்குத்தான் மிதித்தாயா!!! இப்போது புரிந்தது, அவர் மிதிக்கவில்லை, அவன்தான் மிதித்திருக்கிறான். ஏன்டா மடையா, தினம்தானே தூங்குகிறாய், இங்கேயும் வந்து தூங்காமல் விழித்துக்கொள் என்று எழுப்பியிருக்கிறார். அன்று அந்த அபிஷேகம் பார்த்தபொழுது கண்ணில் கண்ணீர் வந்தது, அற்புதம்!!! மனது ஈடுபட்டது!! முருகா!! முருகன் பக்கத்தில் வந்து நின்றான். மறக்காதீர்கள், தமிழால் பாடினால் முருகன் மடியில் வந்து உட்காருவான். இது சத்தியம், அனுபவித்துப் பாருங்கள். இதெல்லாம் எனக்கு காவடி எடுத்தபோது கிடைத்த அனுபவம்.

**உமா:** நம்முடைய பாரம்பரியத்தையும் ஆன்மீகத்தையும், கோவில் தொடர்புகளையும் காப்பாற்றி அடுத்த தலைமுறைக்கு எடுத்துச்செல்ல தங்களுடைய அறிவுரை?

**ஐயா:** தமிழ்நாட்டில் பல கோவில்களில் ஒருவேளை பூஜைக்குக்கூட வழி கிடையாது. பல கோவில்கள் இடிந்து கொண்டிருக்கின்றன. இதையெல்லாம் யாராலும் இனிமேல் கட்டமுடியாது. பல கோவில்களில் அர்ச்சகர்கள்தான் கஷ்டப்பட்டு கோவில்களை நடத்திக்கொண்டிருக்கிறார்கள். அவர்களுக்கு உதவி செய்யுங்கள். நாம் புதுக்கோவில்கள் கட்டவேண்டாம். இருக்கும் பழைய கோவில்களைக் காப்பாற்ற வேண்டும். நம் கோவில்களையெல்லாம் நம் முன்னோர்கள் நம்மிடத்திலே ஒப்படைத்தார்கள், நாம் நம் பிள்ளைகளிடத்திலே அவற்றை ஒப்படைக்க வேண்டும்.

இந்தியாவிலே நிறைய கோவில்கள். இந்தக்கோவில்களுக்கு தினம்தோறும் பக்தர்கள் வருவதற்கும், வந்து தேவாரம், திருவாசகம் படிப்பதற்கும் வாய்ப்புக்களை அதிகப்படுத்திக் கொடுக்கவேண்டும். ஓதுவார்களுக்கு சம்பளம் கம்மி. யாரும் ஓதுவார்களாக வரத் தயாராக இல்லை. அமைப்புக்களை ஏற்படுத்தி அவர்களுக்கு ஏதாவது வழி செய்ய வேண்டும். நீங்கள் இருக்கும் பகுதியிலேயும் உங்கள் சொந்த ஊர்களிலேயும் பிள்ளைகளுக்கு தேவாரம், திருவாசகம் சொல்லிக்கொடுப்பதற்கு ஒரு ஏற்பாட்டை செய்தால் வருங்கால சந்ததிகளுக்கு அது உதவியாய் இருக்கும். வீட்டில் தமிழில் பேசவேண்டும். இல்லாவிட்டால் தமிழ் போய்விடும்.

நாட்டுக்கோட்டை நகரத்தார்கள் அந்தக்காலத்திலே இந்துமதத்தின் கோட்டைக்காவலர்கள் என்று சங்கராச்சார்யார்களால் போற்றப்பட்டவர்கள். நம் பிள்ளைகளுக்கு எப்படியாவது இதை சொல்லிக்கொடுக்கவேண்டும். நம் பிள்ளைகளுக்கு அந்த உணர்ச்சியை ஊட்டவேண்டும்.



**சஞ்சீவ் சொர்ணம்**

சஞ்சீவ் சொர்ணம் தமிழ் கற்றுக்கொள்வதிலும், நமது பாரம்பரியத்தைப் புரிந்து கொள்வதிலும் மிகுந்த ஆர்வமுள்ள 11ஆம் வகுப்பு மாணவன். சஞ்சீவுக்கு வருங்காலத்தில் சிறந்த Baseball Player ஆகவேண்டும் என்பதே லட்சியம்.

Scan here to watch the part 1 interview

Scan here to watch the part 2 interview